Regd. No. 2975.

ஶ்ரீ:

SRI RAMANUJAN

Editor: P. B. ANNANGARACHARYA, KANCHEEPURAM-3.

ஶ்ரீ ராமாநுஜன் 262.

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச் சந்தா ரூ. 8. ஜீவியச் சந்தா ரூ. 25.

ஸ்பெஷல் ஸஞ்சிகை.



ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி*—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம் வாழி*
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

ஸாதாரண௵ ஆவணி௴ வெளியிட்ட ஸ்பெஷல் ஸஞ்சிகை.

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜன் - 262.



சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசன ஸபையின் சார்பாக மாதந்தோறும் வெளிவருவது

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர்.

ஸாதாரண வருஷம் ஆவணி மாதம் வெளியிட்ட

ஸ்பெஷல் ஸஞ்சிகை.

ஸ்ரீராமாநுஜன் அபிமானிகளான அனைவரும் ஊன்றிநோக்குக.



ஸ்ரீராமாநுஜன் 260, 261. ஒன்று சேர்ந்த ஸஞ்சிகை அரியபெரிய அறுநூறு விருந்துகளில் இருநூறு விருந்துகள் கொண்டு ஸமீப காலத்தில் வெளிவந்துள்ளது, அனைவர்க்கும் கிடைத்திருக்கிறது. அடுத்தபடியாக மேல் விருந்துகளையும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றீர்கள். இருநூற்றொன்று முதல் நானூறு ஈறான விருந்துகளை விரைவில் உபஹரிக்கப்போகிறோம். ஐப்பசித்திருமூலத்திற்குள் முழுதும் பெற்று அநுபவிப்பீர்கள். இந்த ஸஞ்சிகை தனி மலராக வெளி வருகின்றது இங்ஙனே இது வெளிவர வேண்டிய ஆவச்யகதையைப்பற்றி அடுத்தபடி தெரிவிக்கலாகும். அதற்குமுன் பேரின்ப வெள்ளமான சில செய்திகளைத் தெரிவிக்கிறேன். அதாவதென்னென்னில்; மற்றும் அற்புதமான அறுநூறு விருந்துகளும் நிகழும் ஆவணித் திங்கள் முடிவதற்குள் (அல்லது) புரட்டாசித் திருமூலத்திற்குள்ளாகப் பெறுவீர்கள். *மொய்த்துக் கண்பனிசோர மெய்கள் சிலிர்ப்ப* என்ற குலசேகரப்பெருமாள் பாசுரப்படியிலே நின்று அதைப் பற்றி விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன், ஏற்கெனவே ஸங்கல்பித்த அறுநூறு விருந்துகள் நாநாரஸங்கள் கொண்டு பற்பல விஷயங்களைப் பற்றியவையென்பதை அறிந்திருக்கிறீர்கள் அப்படியன்றிக்கே மணவாளமாமுனிகளின் பெருமையைப் பற்றியே ஒரு அறுநூறு விருந்து அளிக்கலாகாதோ? என்று, அடியேனுடைய பக்திக்குரிய ஒரு மஹாஸ்வாமி ஸந்நிஹித காலத்தில் ஸாதித்தார். அதை மணவாளமாமுனிகளின் நியமனமாகவே சிரமேற்கொண்டேன். மாமுனிகளின்

அறுநூருண்டு நிறைவு மஹோத்ஸவத்தை யுத்தேசித்துச் செய்வது இங்ஙனே யமையப்பெறுவது அவசியமென்றும் இதுதான் மிகச் சிறந்த கைங்கரியமென்றும் அறுதியிட்டேன்.

"கடல் சூழ்ந்த மண்ணுலகம் வாழ" என்று வாழ்த்துகிருேமாதலால் கடல் சூழ்ந்த உலகமெல்லாம் அநுபவிக்குமாறு அவ்வறுநூறு விருந்துகளை வடமொழியிலும் அளிக்கிறேன். அது ச்லோக ரூபமானது. வ்ருத்தரத்நாகரத்தில் எத்தனை வகையான விருத்தங்களுண்டோ அத்தனை வகைகளிலும் அமைந்தது. அந்த சுலோகங்களின் நேரானமொழிபெயர்ப்பு வசனங்களே தமிழ் விருந்தாகும். சுலோகங்களெல்லாம் மிகவழகிய தேவநாகர லிபியில் அச்சாகி வருகின்றன. அவற்றின் ஆக்கமான தமிழ் விருந்துகள் தனியாகவே அச்சாகி வருகின்றன. ஸம்ஸ்க்ருதத்தை அடியேனுடைய வைதிக மநோஹரா பத்ரிகை மூலமாக வடநாட்டினர் அநுபவிப்பர்கள். தமிழ் நாட்டிலுள்ள ஸம்ஸ்க்ருதஜ்ஞர்களும் ஸ்ரீ ராமாநுஜன் மூலமாக அநுபவிப்பர்கள். தொடரும் என்றிடாமல் ஏக காலத்திலேயே பரிபூர்ணநுபவம் பெறுவிப்பது திண்ணம். மணவாள மாமுனிகளின் நிகரில்லாத் திருவருளின் பயனாக நிகழுமிதனில் விஸ்மயலேசத்திற்கும் இடமில்லையன்ருே. ...

ஓர் பேரின்ப விண்ணப்பம்

மணவாளமாமுனிகளின் அறுநூருண்டு விழாக் கொண்டாட்டத்தின் பொருட்டு காஞ்சீபுரத்தில் ஓர் கமிட்டி சென்ற வைகாசி மாதத்தில் தேவப்பெருமாள் திருத் தேர்த் திருநாளினன்று ஸன்னிதி வீதியில் ஸ்ரீவானமாமலை மடத்தில் கூடிய ஸதஸ்ஸின் மூலமாக நிறுவப் பட்டிருக்கின்றது.

ஸ்ரீகாஞ்சீ மணவாளமாமுனிகளின் ஆருவது நூற்ருண்டு பூர்த்தி விழாக் கமிட்டி

ஷை கமிட்டியின் அங்கத்தினர்கள்,

ஸ்ரீமான் உ. வே. ப்ர ப. அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமி—தலைவர்
,, C. கிருஷ்ணமாச்சாரியார், அட்வகேட்—காரியதரிசி
,, தி. ஈ. விஜயராகவன்—உதவிக் காரியதரிசி
,, A. K. ராஜகோபாலாச்சாரியார், Auditor—பொருளாளர்
,, தி. அ. ஸம்பத்குமாராச்சாரியார், M.A., காஞ்சீபுரம்.
,, N. ஜீயப்பய்யங்கார் ,,
,, நல்லப்பா ரங்கஸ்வாமி அய்யங்கார். அட்வகேட் வேலூர்
,, K. V. ராகவாச்சாரியார் (ஆடிடர்) வேலூர்
,, K. V. நரசிம்மாச்சாரியர் ,, சித்தூர்
,, K. R. சத்யன் ,, காஞ்சீ
,, வா. திருவேங்கடாச்சாரியர் (ஸ்ரீ தே. மணவாளமாமுனிகள் சன்னிதிக்காரர்.
,, திருமணி ஸ்ரீனிவாஸவரதாச்சாரியர் (ஸ்ரீ. தே. ஆழ்வார் சன்னிதிக்காரர்)
,, ப்ர. ஸ்ரீனிவாஸாச்சாரியர், காஞ்சி

ஸ்ரீமான் உ. வே. தி.அ.பு. ஸ்ரீனிவாஸ வரதாச்சாரியர், Prop. ஸ்ரீ வெங்கடேச்வரா பிரஸ் காஞ்சீ.
,, V. N. வெங்கடவரதாச்சாரியர், அட்வகேட். சென்னை
,, K. S. சம்பகேச அய்யங்கார், அட்வகேட். சென்னை
,, K. V. விஜயராகவன், அட்வகேட் காஞ்சீ
,, G. கிஷ்ணமாச்சாரியர், அட்வகேட், செங்கற்பட்டு
,, P. B. ராமானுஜாச்சாரியர், காஞ்சி
,, A. K. சடகோபாசாரியர், அம்பத்தூர்
,, K. V. Srinivasan, Triplicane.
,, பரமார்த்த பூஷணம் } சென்னை
,, நாதுல்ல சம்பத்செட்டியார் }
,, V. எம்பெருமானர் செட்டியார், Hoe & Co., தலைவர், சென்னை
,, A. B. கண்ணபிரான் முதலியார் கண்ணன் & கிருஷ்ண டாக்கீஸ் காஞ்சி
,, M. B சாரங்கபாணி நாயகர் மர வியாபாரம் காஞ்சி

இந்த கமிட்டியின் சார்பாக நடைபெறும் செயல்கள் அடுத்த இதழில் தெரிவிக்கப்படும்

ஸ்ரீமதித்யாதி உபயவே. முதலியாண்டான் பெரியஸ்வாமி ஸ்ரீசைலாசார்ய ஸ்வாமி திருவுள்ளம்பற்றின படியொன்று; (அதாவது) மணவாளமாமுனிகளின் ரஹஸ்ய சதுஷ்டய வியாக்கியானங்களையும் ஈடு முப்பத்தாறுயிரப்படியையும் தகுந்த அதிகாரிகளைக் கொண்டு ஆங்காங்கு ஸ்வாமி ஸன்னிதியில் ஸேவிக்கச்செய்ய வேணுமென்பது இந்த அபிஸந்தியை அனைவரும் ஏக கண்டமாக ஆமோதித்தார்கள். இந்த நிகழ்ச்சி திவ்ய தேசங்கள்தோறும் நடைபெறுவது விசேஷம்.

பெரியார்களிருவரின் பரமபதப்ராப்தி

(1) ஸ்ரீகாஞ்சீபுரியில் ஞானசீலவயோவ்ருத்தராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமது பயவே. திருமலை ஈச்சம்பாடி. வரதாசார்ய ஸ்வாமி 30-8-70 ஞாயிற்றுக்கிழமை மாலை திருநாட்டுக்கெழுந்தருளினர். இந்த ஸ்வாமிக்கு எண்பத்தைந்து திரு நக்ஷத்ரமாகிறது. நடமாட்டமில்லாமல் சயனமாக எழுந்தருளியிருந்தது அதிக நாளில்லை பத்திருபது நாட்களுக்குள்ளாகவேயாம். இவர் லௌகிக உத்யோகத்திலிருந்தபோது, அகாலத்திலேயே உத்யோகத்தை விட்டு விலகி ஸ்வஸ்தானத்தில் நித்யவாஸ நிரதராய் தேவப்பெருமாளுக்கு அருளிச்செயல் கைங்கரியம் பண்ணிக் காலத்தைக் கழிக்க வேணுமென்னும் அபிருசியினுல் திவ்யப்ரபந்தங்களைப் பூர்த்தியாக அதிகரித்து ஸ்வரூப க்ரந்தகாலக்ஷேபங்களுஞ்செய்து, தாம் ஆசைப்பட்டபடியே 40ஸு கைங்கரிய நிரதராக எழுந்தருளியிருந்தார். இவருடைய வியோகம் தேவப்பெருமாளுக்குப் பெருத்த நஷ்டமென்றே சொல்ல வேணும். மணவாளமாமுனிகள் ஸன்னிதியில் நடந்த மஹாமண்டப நிர்மாணத்திற்கு மிகவும் கண்யமான பேருதவிபுரிந்த வள்ளல் என்பதும் இவர் தமக்கு ஏற்றம். இவரை லபித்துப் பரமபதநாதன் பேரின்ப வெள்ளத்தில் ஆழ்ந்திருப்பன். *

(2) அதே நாளில் உலகம் நிறைந்த புகழாளரான ஸ்ரீமதுபய வே. ஸர். S. வரதாசார்ய ஸ்வாமியையும் இம்மண்ணுலகம் இழந்துவிட்டதென்று இதே க்ஷணத்தில் கேட்டு வருந்துகிறோம். லோக விலக்ஷணரான இந்த ஸ்வாமியின் பெருமை வாசாமகோசரம். எவ்வளவெழுதினுலும் பர்யாப்தி பிறவாது. *

பாம்பே பனஸவாடி திருவேங்கடமுடையான் ஸன்னிதியில் விசேஷ நிகழ்ச்சி.

மணவாளமாமுனிகளின் அறுநூறாண்டு நிறைவு மஹோத்ஸவம் ஸாதாரண ஸம்வத்ஸரத் தொடக்கத்திலிருந்தே ஆங்காங்கு ஓரோ வகையாகக் கொண்டாடப் பட்டுவருகிற முறையில் சென்ற ஜூன்மீ 10தேதி முதல் 21தேதி வரையில் ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் ஜகத்குரு காதி கிருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் ஆத்யக்ஷயத்தில் ஈடு மஹோத்ஸவம் பரமவிலக்ஷணமாக நடத்தப்பட்டது. கோயில் திருமலை பெருமாள் கோயில் திருநாராயணபுரம் முதலான பல திவ்ய தேசங்களிலிருந்து முப்பது ஸ்வாமி களுக்குமேல் எழுந்தருளி யிருந்து வேதபாராயண திவ்ய ப்ரபந்த ஸேவைகளுடன் ஈடு முப்பத்தாறுயிரப்படியைப் பூர்த்தியாக ஸேவித்துத் தலைக்கட்டினார்கள். உபய வேதாந் தார்த்த உபந்யாஸங்களும் வித்வான்களால் நடத்தப்பட்டன. ஆங்காங்கு நடைபெற வேண்டிய ப்ரக்ரியைக்கு இதுவொரு ஆதர்சமா யிருந்ததென்று கருதத்தக்கது. ...

பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திப்ரகாசனங்கள்.

எற்கெனவே அடியேன் ஸ்ரீராமாநுஜன் 250ல் விஜ்ஞாபித்திருந்தபடி
இன்றுவரையில் அச்சிடப்பட்டுள்ளவற்றின் அறிக்கை:

1. பூருவாசாரியர்களின் ஸகலஸ்தோத்ரபாடங்களும் தேவநாகரலிபியில். (இதைப்பற்றி எற்கெனவே விளம்பரம் செய்திருந்தோம்.) விலை 3-00

2. எம்பெருமானார் அருளிச்செய்த ஒன்பது திவ்யக்ரந்தங்கள்கொண்ட ஸ்ரீபகவத் ராமாநுஜக்ரந்தமாலை தெலுங்குலிபியில் [நூறு பாரங்கள், 804 பக்கங் கள் கொண்டது] அச்சிட்டு முடிக்கப்பட்டு பைண்டாகி வருகிறது. (விலை 15 ரூ.) ஆவணித்திருமூலத்தன்று வெளியிடப்பெறும்.

3. மேலே குறித்த பகவத்ராமாநுஜக்ரந்தமாலை தெலுங்குலிபியிற் போலவே தேவநாகரலிபியிலும் பதிப்பிக்கப்பட்டு வருகின்றது. முக்கால்பாகம் முடிவுபெற்றது. அனேகமாக கார்த்திகைத்திருமூலத்தன்று வெளிவந்துவிடும்.

4. ஸ்ரீமத்வரவரமுநீந்த்ரக்ரந்தமாலை (தெலுங்குலிபி) மணவாளமாமுனிகளின் வியாக்கியான க்ரந்தங்களனைத்துங்கொண்ட மஹாநிதி அச்சாகி வருகின்றது. முதல் ஸம்புடம் ஐப்பசித் திருமூலத்திலும், இரண்டாவது ஸம்புடம் உத்தரா யணத்திருமூலத்திலும் வெளிவரும்.

5. எங்களாழ்வானருளிச்செய்த ஸ்ரீவிஷ்ணுசித்தீயமென்கிற வியாக்கியா னத்தோடு கூடிய ஸ்ரீவிஷ்ணுபுராணம் தேவநாகரலிபியில் அச்சாகி வருகின்றது. பெரியக்ரந்தமாகையால் முடிவுபெறுவதற்கு ஏறக்குறைய ஒருவருஷகாலமாகும்.

6 ஆளவந்தாருளிச்செய்த ஸித்தித்ரயமும் ஆகமப்ராமாண்யமும்; நடா தூரம்மாள் அருளிச்செய்த தத்வஸாரமும் தேவநாகரலிபியில் அச்சிடப்பட்டு வரு கின்றன; ஐப்பசித்திருமூலத்தில் வெளிவரும்.

7. பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த திருநெடுந்தாண்டகவியாக்கியானம் தமிழ்லிபியில் அச்சாகி முடிவுபெற்றுள்ளது. விலை 4-00.

8. பிள்ளை லோகாசார்யரருளிச்செய்த அஷ்டாதசரஹஸ்யம் தமிழ்லிபியிலும் தெலுங்குலிபியிலும் (தனித்தனியே) இரண்டிரண்டுஸம்புடமாக அச்சிடப்பட்டு வருகிறது. ஒருஸம்புடம் ஐப்பசித்திருமூலத்தில் வெளிவரும்.

9. முமுக்ஷுப்படிஸாரார்த்த தீபிகையும் தத்வத்ரய ஸாரார்த்த தீபிகையும் வெளிவந்திருப்பது உலகமறியும். ஸ்ரீவசனபூஷணஸாரார்த்த தீபிகை ஐப்பசித் திருமூலத்தன்று வெளிவரும். இவை மூன்றும் தெலுங்குபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டவை புரட்டாசித்திருமூலத்தன்று வெளிவரும். முமுக்ஷுப்படி தத்வத்ரய வியாக்கியானங்களுக்கு ஆங்கிலமொழிபெயர்ப்பு அச்சாகி முடிவுபெற்றுள்ளது. (க்வாளியர் ஸ்ரீஉவே. S. ஸத்யமூர்த்திஸ்வாமியின் மொழிபெயர்ப்பு.) விலை ரூ. 3-50

10. மேலே குறித்த மூன்று ரஹஸ்யங்களுக்கும் ஸம்ஸ்க்ருத ஹிந்தி விவர்த்தங்கள் அச்சிடப்பட்டுவருகின்றன.

ஸ்ரீவைஷ்ணவஸுதர்சன பத்ராதிபரான ஸ்ரீ உ வே S கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் M. A. B. L. Advocate ஸ்வாமி ஸ்ரீவசன பூஷணத்தை இரண்டு வியாக்கியானங்களோடும் இரண்டு அரும்பதவுரைகளோடும் அச்சிட ஆரம்பித்திருப்பதை ஏற்கெனவே தெரிவித்திருந்தோம். அதில் ஒரு பகுதி முடிவுபெற்றுள்ளது; (நாற்பது பாரங்களுக்கு மேல் கொண்டவிது) ஐப்பசித்திருமூலத்தன்று வெளியிடப்படுமென்று அறிந்து மகிழ்கிறோம். ஸ்ரீபதுபய வே. வித்வான். வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமியால் அருளிச்செயல்ரஹஸ்யம் அச்சிடப்பட்டு அதனோடு கூட வெளிவருமென்றறிகிறோம்.

ஸ்ரீ ராமாயண ஸ்ரீ பாகவதப்ரகாசனம்.

ஸ்ரீராமாயணத்திற்கு மிகச்சிறந்த வியாக்கியானம் கோவிந்தராஜீயம். ஸ்ரீபாகவதத்திற்கு அப்படிப்பட்ட வியாக்கியானம் வீரராகவீயம். இவ்விரண்டும் இக்காலத்தில் கிடைப்பது அரிதாயிற்று. ஸ்ரீமத்பரம ஹம்ஸேத்யாதி ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் இவ்விரண்டையும் மூலத்தோடுகூட தெலுங்குலிபியில் பதிப்பிக்க ஏற்பாடு செய்து கோவிந்தராஜீய ஸஹிதமான ஸ்ரீராமாயணம் சித்தூரிலும், வீரராகவீயஸஹிதமான ஸ்ரீபாகவதம் ஸகிந்தராபாதிலும் அச்சாகி வருகிறது.

** கவனிக்கவேண்டிய ஒரு மாறுதல். **

தத்வத்ரய ஸாரார்த்த தீபிகை, ஸ்ரீவசனபூஷண ஸாரார்த்த தீபிகை முதலான ரஹஸ்யார்த்த க்ரந்த வெளியீடுகளை விருப்பமுள்ளவர்கள் தனிப் பணமனுப்பிப்பெறவேணுமென்று முன்னிதழில் அறிக்கை வெளியிட்டிருந்தோம். அதிகாரிகளென்று நாமறிந்தவர்களுக்கு நாமே அனுப்பிவிடுகிறோம். ஐப்பசி மாத முடிவுக்குள் கிடைக்கப் பெறாதவர்கள் முன்பு தெரிவித்திருக்கிறபடி ஸ்டாம்பு அனுப்பிப் பெறக்கடவர்கள்.

—(நிர்வாஹ அதிகாரி).

இந்த ஸஞ்சிகையின் விசேஷத்தைப்பற்றி

அன்பர்களும் உதாஸீனர்களுமான உபயகளையர்க்கும் விஜ்ஞாபனம்.

இது ஸ்பெஷல் ஸஞ்சிகையென்று முகப்பில் தெரிவித்திருக்கிறேன். என்னுடைய பற்பல நூல்களையும் தாமாகவே விரும்பிப் படித்திருக்கின்ற உங்களை இப்போது இதனை விசேஷித்துக் குறிக்கொண்டு படிக்கவேணுமென்று கோருகிறேன்.

1. ஸ்ரீமதுபயவே. வித்வான். கோமல். சேஷாத்ரியாசார்யஸ்வாமி.
2. ,, வித்வான். நவநீதம் ஸ்ரீராமதேசிகாசாரியர் திருவிண்ணகர்.
3. ,, வித்வான். பாதூர் ராகவாசாரியர் ஸ்வாமி,மதுராந்தகம்.
4. ,, வித்வான். வாஸுதேவாசாரியர் ஸ்வாமி, உத்தரமேரூர்.
5. ,, சேட்லூர். கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி, புநர்வஸு பத்ராதிபர் ·
6. ,, M. S. வரதாசாரியர். "மஹாவிவேகி" அடையாறு.

இந்த ஆறு ஸஹ்ருதய ஸுஹ்ருந்மணிகளை மத்யஸ்தர்களாயிருந்து விமர்சிக்கும்படி முன்னம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஒருதலையான ஆக்ரஹமும் மாச்சரியமுமில்லாமல் விஷயங்களில்மட்டும் கண்செலுத்தி ஆராய்ச்சி செய்யக் கூடியவர்களென்கிற விச்வாஸத்தினால் இப்பெரியார்களைக் குறிப்பிட்டேனிங்கு. இவர்கள் ஆராயவேண்டிய விஷயம் எது? என்பது மேலே விளங்கும். ஸம்ப்ரதாய பேதஸித்தமான விஷயங்களில் இப்பெரியார்கள் மத்யஸ்தர்களாக இருக்கமுடியா தாகையாலே அத்தகைய விஷயங்களில் நாம் இவர்களுக்குப் பரிச்ரமத்தைக் கொடுக்க விரும்பவில்லை. விரும்புவது உசிதமுமன்று. ராஜமார்க்கமாகவுள்ள தேசிகதிவ்யஸூக்திகளில் நேர்ந்திருக்கின்ற விவாதங்களில் மட்டுமே விரும்புவது.

இந்த ஸஞ்சிகையில் இரண்டேடுகளைத் தள்ளிப்பார்த்தால் பூதிகந்திபுஷ்ப ப்ரஞ்சனம் எனகிற நமது நூலைக் காண்பீர்கள். அதற்கு முகவுரை என்றுள்ள சிறு பகுதியைப் பூர்த்தியாக முன்னம் வாசித்து முடித்துவிட்டுப் பிறகு இவ்விடத்தைத் தொடர்ந்து வாசிக்கக் கோருகிறேன். ... ... அந்த முன்னுரையை வாசித்தாயிற்றா? அதற்கு மேலுள்ள விஷயங்களைப் பூர்த்தியாகப் பிறகு வாசித்தாலும் ஒவ்வொரு பாராவுக்கும் தலையங்கமிட்டிருக்கிறோமே; அதைமட்டும் வரிசையாக வாசித்து முடித்துவிடுங்கள். தன்னடையே வாசித்துமிருப்பீர்கள்.

ஸ்ரீமான் D. T. தாதாசாரியாரவர்களுக்கும் நமக்கும் பலவருஷங்களாகப் பலவிஷயங்களில் விவாதம் விளைந்து அதுக்ரந்தங்களிலும் ஏறியிருந்து இடையில் சிலகாலம் ஓய்ந்திருந்தது. அவர் விடைகூறவேண்டிய நிலைமையில் நிற்கிறார் அவர் இப்போது சென்னையில் வஸித்துவருகிறாராம். அங்குச் சில பாகவதர்களிடத்தில் விப்ரலம்பமான விஷமப்ரசாரங்கள் செய்துவருவதாக நமக்கு எட்டிற்று அவர் விநியோகித்த ஒன்றிரண்டு சுவடிகளையுங் காணலாயிற்று ஸாமான்யமநுஷ்யனை என்னைப்பற்றியோ எனது உக்திகளைப் பற்றியோ இவர் யதேஷ்டமாக நிந்தித்து எழுதலாம். அப்படி அளவுகடந்து எழுதியுமிருக்கிறார். அவற்றுக்கு

ஒன்றுவிடாமல் விடையிறுந்துவருகிறேமென்பதை உலகமறிந்திருக்கிறது. இவர் தமக்கு வேண்டாத பூர்வாசாரியர்களை [பெரியவாச்சான்பிள்ளை முதலானுரை] தேசிகன் ஆசார்யபதவியில் வைத்து ஆராதிப்பவர் என்பதை நமது நூல்களால் நன்கு தெரிந்துகொண்டதனல் அவர்களை நிந்தித்துத் தாம் க்ருதக்ருத்யராக வேணுமென்று உறுதிகொண்டுவிட்டார். அந்த நிந்தைகளெல்லாம் ஸர்வாத்மநா அஸ்தாநே என்று விளக்குவதற்காகவே நமது பூதிகத்தி புஷ்பப்ரணுசன நூல் அவதரிக்கின்றது. இந்நூலே "விஸ்தரபயாத் விரமாம:" என்றே "விரிவுக்கஞ்சி நிற்கின்றேன்" என்றே எழுதி நிற்கிற ரீதியிலே நில்லாமல் விரிவுக்கஞ்சாமலே யெழுதி தத்வஜிஜ்ஞாஸுக்களுக்குத் தத்துவமுணர்த்தியே தீருவோம் ஸ்ரீமான் D. T. தாதாசாரியாருடைய பலபல துர்வாதங்களைப் பலநூல்களில் உதறித்தள்ளி யிருக்கிறேனென்பதை அறிந்திருககிறீர்கள்.

எழுதுகிருரிவர்—சிலவித்வான்கள். சென்னையில் ப்ரவசனம் செய்பவர்கள் கலாவைஷம்யம் பாராட்டாமல் ஸாதுக்களாயும் ஸாத்விகர்களாயும் தங்கள் காரியத்தைமட்டும் பார்த்துக்கொண்டு போகிருர்களென்றும் நாஞெருவனே பயங்கரக்ருத்யங்கள் செய்து வருகிறேனென்றும்.... கேண்மின்; எல்லாவகைக் காரியங்களிலும் எல்லாருமே ப்ரவர்த்திக்கவேணுமென்பதில்லை ப்ரவர்த்திப்பது மில்லை. "ஷியொ யொ நः ஃரசொடயாசு" என்கிற வேதமந்திரத்தை நித்யமும் நாம் நூறுவிசை ஓதிவருகிறேம் "மத்தஸ் ஸ்ம்ருதிர் ஜ்ஞாநம் அபோஹநஞ்ச" என் கிருன் கீதாசார்யன். ஸர்வஜ்ஞர்களாய் தேகிகனுக்கும் வழிகாட்டிகளான பூர்வா சாரியர்களை இவர் அவலீலையாக நிந்தித்திருப்பதை அந்த ஸாதுக்களும் ஸாத்விகர் களும் பார்த்திருக்க ப்ரஸக்தியேது? இவர் தமது சுவடிகளைச்சில பெண்டிர்க்கும் பேதையர்க்குந்தானே ஸமீபகாலத்தில் விநியோகிக்கத் தொடங்கியிருக்கிருர். நம்பிள்ளை கொடங்கி மணவாளமாமுனிகளீருகவுள்ள ஆசாரியர்களில் ஒருவர்க்கும் சாஸ்த்ரஜ்ஞானமே கிடையாதென்றும் ஸ்ரீ பாஷ்ய பரிசயமும் கிடையாதென்றும், பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்திகளைத் திருத்துவதற்கும் கண்டிப்பதற்குமே தேசிகன் நிகமபரிமலத்தை யெழுதிஞரென்றும் D. R. போல்வாருடைய பழம் பாட்டையே இவரும் பாடிக்கொண்டிருக்கிருர்.

ஸாரமாகத் தெரிவிப்பதைக் கேண்மின். தாத்பர்ய சந்த்ரிகையிலும் ஸச் சரித்ரரக்ஷையிலும் விசிஷ்ய த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளீ தத்ஸாரங் களிலும் தேசிகன் பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திகளையே அடியொற்றி யிருக்கிருரென்றும், பிள்ளானுடைய ஆருயிரப்படியை தேசிகன் ஓரிடத்திலும் அநு ஸரிக்கவில்லை யென்றும், திருவாய்மொழிக்கு ஆருயிரப்படியென்று ஒரு வியாக்கி யானமிருந்ததாகவே தேசிகன் அறிந்திலர் (அல்லது) அறிவித்திலர் என்றும் நாம் விரிவாக நிரூபித்திருக்குமவற்றை இவர் (D. T. T.) மறுக்கவும் மறைக்கவும் பார்க் கிருர். இவர்க்கு ஸ்வஸம்ப்ரதாயக்ரந்தங்களிலேயே பரிசய லேசமுமில்லையா யிருக்க, பெரியவாச்சான்பிள்ளை முதலானுருடைய திவ்யஸூக்திகளில் அது ஸுதராம் அப்ரஸக்தம். ஸர்வதந்த்ரஸ்வதந்திரரான தேசிகனுடைய ஸ்ரீஸூக்தி யையே அஸமஞ்ஜஸமென்று தூஷித்தவிவர் தேசிகனுக்கும் தேசிகர்களான ஆசாரியாகளின் ஸ்ரீஸூக்திகளை தூஷிக்கிருரென்ருல் இதில் என்ன வியப்பு?

பெரியாழ்வார் தம்மைத் தலைமகளாக்கித் தாய்ப்பேச்சாலே பேசின இருபதிகங்களில் இரண்டாவதான *நல்லதோர் தாமரைப்பொய்கையில் இரண்டாம் பாட்டில் "நாராயணன் செய்த தீமை, என்றும் எமர்கள் குடிக்கு ஓர் ஏச்சுக் கொலாயிடுங்கொலோ'' என்றது அற்புதமானவருளிச்செயல். இங்குச் சொல்லப்பட்ட நாராயணன் செய்த தீமை எது வென்பதைப் பேராசிரியர்கள்பக்கல் கேட்டுக் கொள்வது. பாசுரத்தையூன்றி நோக்கியும் தெரிந்து கொள்ளலாம். இதில் ''என்றும் எமர்கள் குடிக்கு ஓர் ஏச்சுக்கொலாயிடுங்கொலோ" என்றதுண்டே, அதை மட்டும் இவர்க்கு எடுத்துணர்த்துகிறேன். தேசிக ஸ்ரீஸூக்தியில் இவர்க்கு அஸாமஞ்ஜஸ்யம் தோன்றினல் "இப்படியிப்படி அநுபபத்தி தோற்றுகிறது; சாஸ்த்ரஜ்ஞர்களான மஹான்கள் அருள்கூர்ந்து பரிஹரிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்" என்று இத்தகைய பல வழிகளில் விநயத்தைக்காட்டி வரைந்திருக்கலாம் மாச்சரியமுள்ள மதாந்தரஸ்தர்களும் எழுதமாட்டாததான "அத்ராஸ்தி பஹு அஸாமஞ்ஜஸ்யம்" என்கிற வாக்கியத்தைச் சிறிதும் கூசாமல் எழுதிவைத்த விது இவர் தம் குடிக்கு என்றும் ஏச்சாகுமென்பதை இவர் அறிந்து கொள்ளாமலிருக்க முடியுமா? தேசிகனுக்குப் பரிந்து பெரியவாச்சான்பிள்ளை முதலான ஸர்வஜ்ஞ ஸதாசார்யஸார்வபௌமர்களை நிந்திக்க இவரா அதிகாரி? இவரை எதிரியாக்கி யெழுதுவதனல் நமது அருமருந்தன்ன அவகாசத்தைப் பாழாக்கிக் கொள்வது எவ்வளவோ வருந்தத்தக்கதல்லவா? பரக்ருதத்தில் அடியேன் புரிந்துவரும் தொண்டுகளில்இதுவும் முக்கியமான தொண்டுதானென்று எண்ணியே வருத்தத்தை விலக்கி உகப்பை ஏன்றுகொண்டே யெழுதுகிறேன்.

இவர் தமது பூதி கந்திபுஷ்பத்தில் (பக்கம் 78ல்) "ஸ்ரீ ராமாநுஜன் 132ல்'' என்று தொடங்கி இவரெழுதியுள்ளவற்றை அப்படியே அநுவதிக்கிறேன்;—

''ஸ்ரீராமாநுஜன் 132ல் (P. B. A. எழுதியிருப்பதாவது) ஸம்ப்ரதாயவிஷயமாக நாமெழுதும் நூல்களுக்கு ஜீவநாடியான விஷயங்கள் இரண்டே;(1 தேசிகன் பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திகளை மணவாளமாமுனிகளுக்கும் மேலாகக் கண்டபாடம் செய்திருந்தவர்; அந்த ஸ்ரீஸூக்திகளையே பற்றுக்கோடாகக் கொண்டு எழுதுமவர் தேசிகன் என்கிறவிது ஒரு விஷயம் (2) இவ்வுண்மையை அறியகில்லாதவர்களாய் (அல்லது) அறிந்துவைத்தும் அபலபிப்பவர்களான நவீனர்கள் தேசிகனைப் பெரியவாச்சான்பிள்ளைக்கு விரோதியாக எழுதுவதும் அந்த தேசிகனேடு தங்களுக்கொரு தொடர்பு இருப்பதாக அபிநயிப்பதும் மிகத்தவறு-என்கிறவிது மற்றொருவிஷயம். (இப்படி உண்மையாக நாம் எழுதியிருப்பதை அநுவதித்துவிட்டு மேலே

மூளைக்கலக்க மித்யாதிகளால் நம்மை அபரிமிதமாக ஸம்பாவித்திருக்கிருர். அந்த ஸம்பாவனைகளையெல்லாம் உகந்து ஏற்றுக்கொள்வோம். மேலே உதஹரித்த ஜீவநாடியென்னும் இரண்டு விஷயங்களும் ஸத்யமானவையே ''ஸத்யமானவையே" யென்று என்கையினலெழுதுவதிலும் என்வாயினற் சொல்லுவதிலும் என்ன பயன்? இவர் வாயினல் சொல்லுவித்து, இவர் திருக்கையினல் எழுதுவிக்கிறேன்.

இவர் தமது பூதிகந்தி புஷ்பத்தில் 64, 65 66, பக்கங்களில் த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்னவளீ ஸாரங்களுக்கு ஆருயிரப்படியோடு பொருத்தத்தையும்,

பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திகளோடு ஸம்பந்தமில்லாமையையும் மூதலிக்கப் பாடுபடுகிறார். [கீழே மத்யஸ்தர்களாக நம்மால் வரிக்கப்பட்டுள்ள மஹநீயர்கள் அறுவரும் இங்கே விசிஷ்ய மதிசெலுத்தவேணும்.] திருவாய்மொழி பத்தாம் பத்தின் முதற்பதிகமான *தாளதாமரைக்குப் பிள்ளான் இட்டருளின அவதாரிகையின்படியன்றிக்கே நம்பிள்ளை முதலானார் இட்டருளின அவதாரிகையையே தேசிகன் ஆதரித்து ரத்நாவளியையும் ஸாரத்தையும் பணித்துள்ளாரென்று நாம் (நினைவுக்கு வருகிறவரை, ஐந்து நூல்களில் நிரூபித்திருக்கிறோம். D.T.எழுதுகிறார்—

> "இங்கு மஹாவித்வான் (P. B. A.) திருவாய்மலர்ந்தருளுகிறார் 'ஸத்கதிஸ் ஸ்யாத்' என்பதற்கு வியாக்கியான மிட்டவர்கள் 'காளமேகப்பெருமாளை வழித்துணையென்று' என்றெழுதி வைத்தார்கள்.........." இத்யாதி.

மத்யஸ்த மஹான்களுக்கு இங்கு விஜ்ஞாபிக்கிறேன். "ஸத்பதவ்யாம் ஸஹாயம் என்று தாத்பர்யரத்நாவளியிலும், ஸத்ஸரணிம் என்று ஸாரத்திலும் தேசிகன் அருளிச் செய்திருப்பதை இவர் (D. T. T.) தமது கையாலெழுதுகிறார். இப் பதிகத்திற்கு ஆறாயிரப்படியில் காணுமவதாரிகை—"திருக்கண்ணபுரத்திலெம்பெருமானையநுபவித்து இப்போது திருமோகூரிலெம்பெருமானையநுபவிக்கிறார்" என்னு மிவ்வளவே. "ஸத்பதவ்யாம் ஸஹாயம்" என்று தேசிகன் ஸாதிக்கும்படியாக ஆறாயிரப்படியில் ஒரெழுத்துமில்லை. மற்ற வியாக்கியானங்களில்தானுள்ளது. (அதாவது) நம்பிள்ளை திருவடிகளின் வியாக்கியானங்களில்தானுள்ளது. இதைத் தான் தேசிகன் பொன்னேபோல் போற்றினர் என்பது ப்ராமாணிகபரிசீலநீயம்.

இதற்கு இவர் எழுதுகிறார்—ஸத்பதவ்யாம் ஸஹாயம் என்பது த்ரமிடோப நிஷத்ஸாரத்தில்தான் உள்ளது. ஸாரக்ரந்தம் ஒரு சதகத்தின் ஸாரார்த்தத்தைத் தெரிவிப்பதேயொழிய தசகத்தின் ஸாரத்தைத் தெரிவிப்பதன்று. ஏவஞ்ச தேசிகன் கூறின ஸத்பதவீஸஹாயத்வம் பத்தாம்பத்தின் (அதாவது நூறுபாசுரங்களின்) ஸாரார்த்தமேயொழிய *தாளதாமரையென்கிற ஒரு பதிகத்தின் ஸாரார்த்தமன்று—என்று. இதற்கு முண்டித மஸ்தகலலநாமணிகள் சிலர் ஏமாற்றமடையலாமத்தனை. பத்துப்பாசுரங்களின் ஸாரத்தைச் சொல்லும் போது பதிகத்தில் ஒரு பாசுரத்தையோ ஒன்றிரண்டு பாசுரங்களையோ தான் உயிராகக் கொள்ள முடியும். அப்படியே ஒரு சதகத்தின் ஸாரத்தைச் சொல்லும் போது ஒரு பதிகத்தின் ப்ரமேயத்தையே உயிராகக் கொள்ளமுடியும். வேறு விதமாக முடியவே முடியாது. ப்ரக்ருதத்தில் ஸத்பதவ்யாம் ஸஹாயமென்றது சதகத்தின் ஸாரமே; எந்த தசகத்தை உயிராகக் கொண்டு இதை ஸாரார்த்தமாக தேசிகனருளிச்செய்தாரென்று கேட்டால் கட்டகுட்யாம் ப்ரபாதம். அந்த ஸாரத்திலேயே (சுலோகம் 21ல்) "த்ரிவர்மாதிக்ராந்த ஸ்திரநகரகண்டாபதமதே: ஸஹாயீகுர்வாணச் சரமசதகே விந்ததி முநி:" என்றருளியதும் பத்தாம்பத்துக்குத் தாளதாமரைப் பதிகத்தை உயிராகக் கொண்டே யொழிய வேறு எந்த பதிகமும் ஸஹாயத்வத்திற்கு ஸூசகமாக விரகில்லை.

மத்யஸ்தமஹநீயர்களே! உபஸம்ஹரிக்கிறேனிதை. தேசிகன் பெரிய வாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்திகளை எவ்வளவோ கொள்ளைகொண்டு அநு

பவித்தும் அநுபவிப்பித்தும் போந்திருக்கிருரென்பது நம்மால் செப்பேடும் கல் வெட்டுமாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஆருயிரப்படியை உபஜீவித்த விடம் ஒன்றிருந்தாலும் எடுத்துக் காட்டட்டுமிவர். பிள்ளானுடைய நிர்வாஹமென்று இருபத்து நாலாயிரப்படியிலும் ஈட்டிலும் பலவிடங்களில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. அப்படி ஓரிடமாவது தேசிக க்ரந்தங்களிலெடுத்துக் காட்ட இயலுமா? *ஓடும் புள்ளேறி* இவையுமவையும்* என்கிற பதிகங்களின் ப்ரமேயத்தைப் பற்றியே நாம் முதன்முதலாக விசாரம் தொடங்கினோம். இதில் இவர் ஆந்தனையும் போராடியிருக்கிருர். கடைசியாக இப்போது ஆருயிரப்படியில் இல்லாத ப்ரக்ஷிப்த வாக்யங்களை யெடுத்துக்காட்டியிருக்கிருர்; இதைப்பற்றி நாம் மேலே (பக்கம் 5ல்) "நமது பிரபலமான சபதமொன்று" என்றெழுதியிருப்பதை இந்த நாலுக்கு ஜீவநாடியாகக் கொள்ளுங்கள். "இதுகாறும் நான் வெளியிட்டிருக்கிற எண்ணூறு நூல்களையும் மயிலையில் கொணர்ந்து மஹான்களின் முன்னிலையில் கிழித்தெறிந்து விட்டு அவ்விடத்திலேயே தொண்டர்தொண்டனயிருந்து ஆயுச் சேஷத்தைக் கழிக்கக்கடவேன்" என்பது என்னுடைய சபதமென்பதை உணருங்கள். அந்த விஷயத்திலும் *தாள தாமரைப்பதிகத்தைப்பற்றி யீண்டு உபபாதித்த விஷயத்திலுமே உங்களுடைய மாத்யஸ்த்யம் விரும்பப்பட்டது.

ப்ரஸங்காத் த்ரமிடோப நிஷத் தாத்பர்யரத்நாவளியில் ஒரு பெரிய விஷயங்கேண்மின்; திருவாய்மொழி பத்தாம்பத்தில் (3) *வேய்மரு தோளிணைப் பதிகத்தில் (6) *அடிச்சியோந் தலைமிசை நீயணியாய் ஆழியங்கண்ணு உன் கோலப்பாதம்* என்பது சுவைமிக்க பாசுரம். இதில் (ஆழியங்கண்ணு!) என்பதற்குக் கடல் போல் ச்ரமஹரமான கண்களையுடையவனே! என்று பொருள். இங்கு ஆழி யென்பதற்கு திருவாழி (சக்கரம்) என்கிற பொருளை எந்த ஆசார்யரும் அருளிச் செய்திருக்கவில்லை. ஆருயிரப்படி முதல் எல்லாவியாக்கியானங்களிலும் ஏகரீதியாக " உன்னுடைய அழகிய திருக்கைகளை அடியோங்களுடைய தலையிலே வைத்தருளித் திருக்கண்களாலே குளிரப்பார்த்தருளாய்" என்று சுவைமிக்க பொருளை யருளிச்செய்திருக்க, இந்த ரஸகனமான பொருளை ச்லோகத்தில் அடக்க முடியாமல், ஆழி யென்பதற்கு சக்கரமென்று பொருள்கொண்டு "சக்ராஜாயுத த்வாத்" என்ருர் தாத்பர்யரத்னவலியில். * நற்பாலயோத்தியில்வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக் குய்த்தனன்* என்றவிடத்தில் வாதிகேஸரி ஜீயருரையை அடியொற்றினபடி காட்டியிருக்கிருேம். இவை தேசிகன்மீது தோஷாரோபணமாக எழுதுமவையல்ல; நம்பிள்ளை திருவடிகளின் வியாக்கியானங்களைக் கைவிளக்காகக் கொண்டே தேசிகன் அருளிச்செயற்பொருள்களை அறிவிக்கின்ருரென்பதைக் கல்வெட்டாக்குகிறபடியே யொழிய வேறில்லை. நம்பிள்ளை திருவடிகளின் வியாக்கியானங்களில் இல்லாமல் ஆருயிரப்படியில் மட்டுமுள்ளதான ஒரு அர்த்தமும் தேசிகஸூக்தியில் காட்டமுடியாதென்பதும், தேசிகனுக்கு ஆருயிரப்படி கிடைக்கவேயில்லை யென்பதும், ஆருயிரப்படியென்று ஒன்று இருந்ததாகக்கூட தேசிகன் அறிந்திருந்ததில்லை யென்பதுமே நமது நிரூபணஸர்வஸ்வம். ... *

श्रीमते रामानुजाय नमः



संक्षेपेण नित्यनैमित्तिकाद्यनुष्ठाने स्पृहामुद्वहतामास्तिकानामुपकारार्थम्
श्रीकाञ्ची प्रतिवादि भयङ्कर अण्णङ्गराचार्येण संकलिता

॥ नित्यानुष्ठानपद्धतिः ॥

*நித்யநைமித்திகாநுஷ்டானங்களை ஸங்க்ரஹமாக
அநுஷ்டிக்க விரும்பும் ஆஸ்திகர்களின் வேண்டு
கோளுக்கிணங்கி*

ஸ்ரீகாஞ்சி. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் தொகுத்த

நித்யாநுஷ்டாநபத்ததி

(மூன்ருவது பதிப்பு,)

சென்னை லிபர்ட்டிப்ரெஸ்ஸில் அச்சிடப்பட்டது.
ஸாதாரண ஃ ஆனித்திருமூலம்

1970

கிடைக்குமிடம் :
P. B. Annangaracharya,
Kancheepuram—3.

விலை : ரூ 1.

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத்வரவரமுநயே நம:

ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி எழுதிய

நித்யாநுஷ்டாநபத்ததி

॥ नित्यानुष्ठान पद्धतिः ॥

முன்னுரை

வைதிக வ்ருத்தியில் போதுபோக்கமுடியாமல் பெரும்பாலும் உத்தியோகங்களிலும் வியாபாரங்களிலும் ஊன்றியிருக்கும் ஆஸ்திகர்களில் தங்களுடைய அவகாசத்திற்குத் தக்கபடி செய்யக்கூடிய நித்யாநுஷ்டாநுதி க்ரமங்களைத் தெரிந்துகொள்ள விரும்புவார் பலருளர், அன்னவர்களின் கோரிக்கையைப் பூர்த்தி செய்யவே இச்சிறு புத்தகம் எழுதப்படுகின்றது. வேதவிண்ணப்பம் முதலானவையெல்லாம் இதிலடங்கும்.

* பின்மாலை படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போது அநுஸந்திக்கவேண்டியவை, தீர்த்தமாடும்போது அநுஸந்திக்கவேண்டியவை, தேவர்ஷி பித்ருதர்ப்பணம், குருபரம்பரைகள், திருவாராதனத்தில் அநுஸந்திக்கவேண்டியவை, அமாவாஸ்யை க்ரஹணம் முதலான ஸமயங்களில் செய்யவேண்டிய தர்ப்பண க்ரமம், யஜ்ஞோபவீதமணியும்போது சொல்லவேண்டியவைகள், இரவில் சயனிக்கும்போது அநுஸந்திக்க வேண்டியவை முதலானவையெல்லாம் இப் புத்தகத்தில் விளக்கப்படும்.

பின்மாலை துயில் விட்டெழுதல்.

ஹரிர்ஹரி:, ஹரிர்ஹரி: என்று செல்லிக்கொண்டே படுக்கையை விட்டெழுந்தவும் கைகாலலம்பி ஆசமனமும் ப்ராணாயாமமும்செய்து சுத்தமான வோரிடத்திலிருந்துகொண்டு, இதன்கீழே குறிக்கப்படுகின்ற சுலோகங்களை யதாசக்தி அநுஸந்திப்பது. சுலோகங்கள் சொல்ல இயலாதவர்கள் மேலே எழுதப்படும் பாசுரங்களையநுஸந்திப்பது. இரண்டையும் அநுஸந்தபபது நலமே.

(சுலோகங்கள்.)

हरिर्हरति पापानि दुष्टचित्तैरपि स्मृतः। अनिच्छयाऽपि संस्पृष्टो दहत्येव हि पावकः॥

ஹரிர் ஹரதி பாபாநி துஷ்டசித்தைரபி ஸ்ம்ருத:. ।
அநிச்சயாபி ஸம்ஸ்ப்ருஷ்டோ தஹத்யேவ ஹி பாவக: ॥

वाराणस्यां कुरुक्षेत्रे नैमिशारण्य एव च। दत्तं स्यात्तेन येनोक्तं हरिरित्यक्षरद्वयम्॥

வாராணஸ்யாம் குருக்ஷேத்ரே நைமிசாரண்ய ஏவ ச ।
தத்தம் ஸ்யாத் தேந யேநோக்தம் ஹரிரித்யக்ஷரத்வயம் ॥

कौसल्यासुप्रजाराम! पूर्वा सन्ध्या प्रवर्तते। उत्तिष्ठ नरशार्दूल! कर्तव्यं दैवमाह्निकम् ॥

கௌஸல்யாஸுப்ரஜாராம! பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே |
உத்திஷ்ட நரசார்தூல! கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம் ||

उत्तिष्ठोत्तिष्ठ गोविन्द! उत्तिष्ठ गरुडध्वज!। उत्तिष्ठ कमलाकान्त! त्रैलोक्यं मङ्गलं कुरु ॥

உத்திஷ்டோத்திஷ்ட கோவிந்த! உத்திஷ்ட கருடத்வஜ! |
உத்திஷ்ட கமலாகாந்த! த்ரைலோக்யம் மங்களம் குரு ||

(மேல் சுலோகங்கள் நடாதூரம்மாள் அருளியவை)

सत्सङ्गाद्भवनिस्स्पृहो गुरुमुखात् श्रीशं प्रपद्यात्मवान् प्रारब्धं परिभुज्य कर्मशकलं प्रक्षीणकर्मान्तरः।
न्यासादेव निरङ्कुशेश्वरदयानिर्लूनमायान्वयः हार्दानुग्रहलब्धमध्यधमनिद्वारा बहिर्निर्गतः ॥ १

ஸத்ஸங்காத் பவநிஸ்ஸ்ப்ருஹோ குருமுகாத் ஸ்ரீசம் ப்ரபத்யாத்மவாந்
ப்ராரப்தம் பரிபுஜ்ய கர்மசகலம் ப்ரக்ஷீணகர்மாந்தர: |
ந்யாஸாதேவ நிரங்குசேச்வர தயாநிர்லூநமாயாந்வய:
ஹார்தாநுக்ரஹலப்தமத்யதமநித்வாரா பஹிர் நிர்க்கத: ||

मुक्तोऽर्चिर्दिन पूर्वपक्षषडुदङ्मासाब्दवातांशुमद्ग्लौविद्युद्वरुणेन्द्रधातृमहितः सीमान्तसिन्ध्वाप्लुतः।
श्रीवैकुण्ठमुपेत्य नित्यमजडं तस्मिन्परब्रह्मणः सायुज्यं समवाप्य नन्दति समं तेनैव धन्यः पुमान् ॥ २

முக்தோர்ச்சிர் திநபூர்வபக்ஷஷடுதங்மாஸாப்தவாதாம்சுமத்
க்லௌவித்யுத்வருணேந்த்ர தாத்ருமஹிதஸ் ஸீமாந்தஸிந்த்வாப்லுத: |
ஸ்ரீவைகுண்டமுபேத்ய நித்யமஜடம் தஸ்மிந் பரப்ரஹ்மண:
ஸாயுஜ்யம் ஸமவாப்ய நந்ததி ஸமம் தேநைவ தந்ய: புமாந் ||

प्रातर्नित्यानुसन्धेयं परमार्थं मुमुक्षुभिः। श्लोकद्वयेन संक्षिप्तं सुव्यक्तं वरदोऽब्रवीत् ॥

ப்ராதர் நித்யாநுஸந்தேயம் பரமார்த்தம் முமுக்ஷுபி: |
ச்லோகத்வயேந ஸம்க்ஷிப்தம் ஸுவ்யக்தம் வரதோப்ரவீத் ||

(மேலிரண்டு ச்லோகங்களும் கஜேந்திரமோக்ஷ விஷயமாக
அம்மாள் தாமே யருளிச் செய்தவை)

ग्राहग्रस्ते गजेन्द्रे रुवति सरभसं तार्क्ष्यमारुह्य धावन् व्याघूर्णन्माल्यभूषावसनपरिकरो मेघगम्भीरघोषः।
आबिभ्राणो रथाङ्गं शरमसिमभयं शंखचापौ सखेटौ हस्तैः कौमोदकीमप्यवतु हरिरसौ अंहसां संहते नः ॥

க்ராஹக்ரஸ்தே கஜேந்த்ரே ருவதி ஸரபஸம் தார்க்ஷ்யமாருஹ்ய தாவந்
வ்யாகூர்ணந்மால்யபூஷாவஸநபரிகரோ மேககம்பீரகோஷ: |
ஆபிப்ராணோ ரதாங்கம் சரமஸிமபயம் சங்கசாபௌ ஸகேடௌ
ஹஸ்தை: கௌமோதகீமப்யவது ஹரிரஸௌ அம்ஹஸாம் ஸம்ஹதேர் ந: ||

नक्राक्रान्ते करीन्द्रे मुकुलितनयने मूलमूलेति खिन्ने नाहं नाहं न चाहं न च भवति पुनस्तादृशो मादृशेषु।
इत्येवं त्यक्तहस्ते सपदि सुरगणे भावशून्ये समस्ते मूलं यः प्रादुरासीत् स दिशतु भगवान् मङ्गलं सन्ततं नः ॥

நக்ராக்ராந்தே கரீந்த்ரே முகுலிதநயநே மூலமூலேதி கிந்நே
நாஹம் நாஹம் ந சாஹம் ந ச பவதி புநஸ் தாத்ருசோ மாத்ருசேஷு |
இத்யேவம் த்யக்தஹஸ்தே ஸபதி ஸுரகணே பாவசூந்யே ஸமஸ்தே
மூலம் ய: ப்ராதுராஸீத் ஸ திசது பகவாந் மங்கலம் ஸந்ததம் ந: ||

(அம்மாள் தாமேயருளிச் செய்த பரத்வாதி பஞ்சகம்)
(பரத்வநிலை)

उद्यद्भानुसहस्रभास्वरपरव्योमास्पदं निर्मलज्ञानानन्दघनस्वरूपम अमलज्ञानादिभिष्षड्गुणैः ।
जुष्टं सूरिजनाधिपं धृतरथाङ्गाब्जं सुभूषोज्ज्वलं श्रीभूसेव्यमनन्तभोगिनिलयं श्री वासुदेवं भजे ॥

உத்யத்பாநுஸஹஸ்ரபாஸ்வரபரவ்யோமாஸ்பதம் நிர்மல
ஜ்ஞாநாநந்தகநஸ்வரூபம் அமலஜ்ஞாநாதிபிஷ் ஷட்குணை: |
ஜுஷ்டம் ஸூரிஜநாதிபம் த்ருதரதாங்காப்ஜம் ஸுபூஷோஜ்ஜ்வலம்
ஸ்ரீபூஸேவ்யமநந்தபோகிநிலயம் ஸ்ரீவாஸுதேவம் பஜே ||

(வ்யூஹநிலை)

आमोदे भुवने प्रमोद उत सम्मोदे च सङ्कर्षणं प्रद्युम्नञ्च तथाऽनिरुद्धमपि तान् सृष्टिस्थिती चाप्ययम् ।
कुर्वाणान् मतिमुख्यषड्गुणवरैर्युक्तान् त्रियुग्मात्मकैः व्यूहाधिष्ठितवासुदेवमपि तं क्षीराब्धिनाथं भजे ॥

ஆமோதே புவநே ப்ரமோத உத ஸம்மோதே ச ஸங்கர்ஷணம்
ப்ரத்யும்நஞ்ச ததாநிருத்தமபி தாந் ஸ்ருஷ்டிஸ்திதீ சாப்யயம் |
குர்வாணாந் மதிமுக்க்யஷட்குணவரைர் யுக்தாந் த்ரியுக்மாத்மகை:
வ்யூஹாதிஷ்டிதவாஸுதேவமபி தம் க்ஷீராப்திநாதம் பஜே ||

(விபவ நிலை)

वेदान्वेषण मन्दराद्रिभरण क्ष्मोध्दारण स्वाश्रित-प्रह्लादावन भूमिभिक्षण जगद्विक्रान्तयो यत्क्रियाः ।
दुष्टक्षत्रनिबर्हणं दशमुखाद्युन्मूलनं कर्षणं कालिन्द्या अतिपापकंसनिधनं यत्क्रीडितं तं नुमः ॥

வேதாந்வேஷண மந்தராத்ரிபரண க்ஷ்மோத்தாரண ஸ்வாச்ரித
ப்ரஹ்லாதாவந பூமிபிக்ஷண ஜகத்விக்ராந்தயோ யத்க்ரியா: |
துஷ்டக்ஷத்ரநிபர்ஹணம் தசமுகாத்யுந்மூலநம் கர்ஷணம்
காளிந்த்யா அதிபாபகம்ஸநிதநம் யத்க்ரீடிதம் தம் நும: ||

(அந்தர்யாமி நிலை)

यो देवादि चतुर्विधेषु जनिषु ब्रह्माण्डकोशान्तरे सम्भक्तेषु चराचरेषु च विशन्नास्ते सदाऽन्तर्बहिः ।
विष्णुं तं निखिलेष्वणुष्वणुतरं भूयस्सु भूयस्तरं स्वाङ्गुष्ठप्रमितं च योगिहृदयेष्वासीनमीशं भजे ॥

யோ தேவாதி சதுர்விதேஷு ஜநிஷு ப்ரஹ்மாண்ட கோசாந்தரே
ஸம்பக்தேஷு சராசரேஷு ச விசந்நாஸ்தே ஸதாந்தர் பஹி: |
விஷ்ணும் தம் நிகிலேஷ்வணுஷ்வணுதரம் பூயஸ்ஸு பூயஸ்தரம்
ஸ்வாங்குஷ்டப்ரமிதஞ்ச யோகிஹ்ருதயேஷ்வாஸீநமீசம் பஜே ||

(அர்ச்சாவதார நிலை)

श्रीरङ्गस्थलवेङ्कटाद्रिकरिगिर्यादौ शतेऽष्टोत्तरे स्थाने भौमनिकेतनेष्वपि सदा सान्निध्यमासेदुषे ।
अर्चारूपिणमर्चकाभिमतितः स्वीकुर्वते विग्रहं पूजां चाखिलवाञ्छितान् वितरते श्रीशाय तस्मै नमः ॥

ஸ்ரீரங்கஸ்தலவேங்கடாத்ரிகரிகிர்யாதௌ சதேஷ்டோத்தரே
ஸ்தாநே பௌமநிகேதநேஷ்வபி ஸதா ஸாந்நித்யமாஸேதுஷே |
அர்ச்சாரூபிணமர்ச்சகாபிமதித: ஸ்வீகுர்வதே விக்ரஹம்
பூஜாஞ்சாகிலவாஞ்சிதாந் விதரதே ஸ்ரீசாய தஸ்மை நம: ||

प्रातर्विष्णोः परत्वादिपञ्चकस्तुतिमुत्तमाम् । पठन् प्राप्नोति भगवद्भक्तिं वरदनिर्मिताम् ॥

ப்ராதர் விஷ்ணோ: பரத்வாதிபஞ்சகஸ்துதிமுத்தமாம் ।
படந் ப்ராப்நோதி பகவத்பக்திம் வரதநிர்மிதாம் ॥

(இப்பத்து ச்லோகங்களையும் கண்ட பாடம் செய்வது சிரமமாக இருந்தால் முதலிரண்டு சுலோகங்களை மட்டும் அநுஸந்திப்பது. சிலநாள் வரை பின்மாலையில் புத்தகத்தைப் பார்த்தே வாசித்து வந்தால் நாளடைவில் எளிதாகப் பாடமாய் விடும்.)

திருப்பள்ளியெழுச்சியைப் பூர்த்தியாக அநுஸந்திப்பது அல்லது முதற் பாசுரமும் முடிவு பாசுரமும்.

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான் கனவிருளகன்றது காலையம் பொழுதாய்*
மதுவிரிந் தொழுகின மாமலரெல்லாம் வானவரரசர்கள் வந்து வந்தீண்டி*
எதிர்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்த இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்*
அதிர்தலி லலைகடல் போன்றுள தெங்கும் அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே.

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன விவையோ கதிரவன் கனைகடல் முளைத்தன னிவனோ*
துடியிடையார் சுரிகுழல் பிழிந்துதறித் துகிலுடுத்தேறினர் சூழ்புன லரங்கா*
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து தோன்றியதோள்
[தொண்டரடிப்பொடி யென்னு
மடியனை* அளியனென்றருளி யுன்னடியார்க் காட்படுத்தாய் பள்ளி யெழுந்தருளாயே,

பிறகு சரீரசுத்தி க்ருத்யங்களை முடித்துக்கொண்டு பல் விளக்குதல் முதலியவற்றைச் செய்வது. பல் விளக்கும்போது உத்தரீயத்தைத் தலையில் சுற்றிக்கொண்டு உட்காரவேணும். பல் விளக்குவதற்கு முன்னும் பின்னும் ஆசமனம் செய்யவேணும். ஆசமனமென்பது எப்போதும் இரண்டு தடவை செய்யவேணும். பஹிர்ப்பூமிக்குப் போய் 1ˀ2 தடவை கண்டூஷம் செய்த பிறகு மூன்று தடவை ஆசமனம் செய்யவேணும்.

(ஆசமநமந்த்ரம்—आचमनमन्त्रः)

(இளமையில் கற்றிருந்தாலும் நினைப்பூட்டுகிறபடி)

अच्युताय नमः अनन्ताय नमः गोविन्दाय नमः ॥ केशवाय नमः नारायणाय नमः माधवाय नमः
गोविन्दाय नमः विष्णवे नमः मधुसूदनाय नमः त्रिविक्रमाय नमः वामनाय नमः
श्रीधराय नमः हृषीकेशाय नमः पद्मनाभाय नमः दामोदराय नमः ।

அச்யுதாய நம:. அநந்தாய நம:. கோவிந்தாய நம:. கேசவாய நம:. நாராயணாய நம:. மாதவாய நம:. கோவிந்தாய நம:. விஷ்ணவே நம:. மதுஸூதநாய நம:. த்ரிவிக்ரமாய நம:. வாமநாய நம: ஸ்ரீதராய நம:. ஹ்ருஷீகேசாய நம:. பத்மநாபாய நம:. தாமோதராய நம:.

(ப்ராணாயாம மந்த்ரம்—प्राणायाम मन्त्रः)

ओं भूः. ओं भुवः. ॐ सुवः. ओं महः. ओं जनः. ओं तपः. ॐ सत्यम्। तत्सवितुर्वरेण्यं भर्गो देवस्य धीमहि । धियो यो नः प्रचोदयात्। ओमापो ज्योतीरसः अमृतं ब्रह्म भूर्भुवस्सुवरोम्।

ஓம் பூ:. ஓம் புவ:. ஓம் ஸுவ:. ஓம் மஹ:. ஓம் ஜந:. ஓம் தப: ஓம் ஸத்யம்.
தத் ஸவிதுர் வரேண்யம். பர்க்கோ தேவஸ்ய தீமஹி. தியோ யோ ந: ப்ரசோதயாத்.
ஓமாபோ ஜ்யோதீரஸ: அம்ருதம் ப்ரஹ்ம பூர்ப்புவஸ் ஸுவரோம்,

நீர்த்தமாடும் க்ரமம். தடாகத்தில் (யதாஸௌகர்யம் ஏதேனும் நீர் நிலையில்) நீராடும் போது ஆசமனமும் ப்ராணாயாமமும் செய்து சில ச்லோகங்களையும் பாசுரங்களையும் அநுஸந்திக்க வேணும். (அவையாவன).

कावेरीमवगाहिषीय भगवद्भोगान्तरायीभवत्कर्मक्लेशफलाशयप्रशमनोद्वेलामलस्रोतसम्।
जन्तोस्संसरतोऽर्चिरादिसरणिव्यासङ्गभङ्गाय या लोकेस्मिन् विरजेव वेल्लितजला श्रीरङ्गमालिङ्गति ॥

காவேரீமவகாஹிஷீய பகவத்போகாந்தராயீபவத்
கர்மக்லேசபலாசயப்ரசமநோத்வேலாமலஸ்ரோதஸம் ।
ஜந்தோஸ் ஸம்ஸரதோர்ச்சிராதிஸரணிவ்யாஸங்கபங்காய யா
லோகேஸ்மிந் விரஜேவ வேல்லிதஜலா ஸ்ரீரங்கமாலிங்கதி ॥

तापत्रयीमैन्दवपुष्करिण्यां निमज्ज्य निर्वापयितास्मि यस्याः ।
अभ्यासतोऽपाम् अवमर्षणीनां चन्द्रस्सुधादीधितितामवाप ॥

தாபத்ரயீமைந்தவபுஷ்கரிண்யாம் நிமஜ்ஜ்ய நிர்வாபயிதாஸ்மி யஸ்யா: ।
அப்யாஸதோபாம் அகமர்ஷணீநாம் சந்த்ரஸ் ஸுதாதீதிதிதாமவாப ॥

विगाहे यामुनं तीर्थं साधुवृन्दावने स्थितम् । निरस्तजिह्मगस्पर्शे यत्र कृष्णः कृतादरः ॥

விகாஹே யாமுநம் தீர்த்தம் ஸாதுப்ருந்தாவநே ஸ்திதம் ।
நிரஸ்தஜிஹ்மகஸ்பர்சே யத்ர க்ருஷ்ண: க்ருதாதர: ॥

கொண்டைகெண்ட கோதைமீது தேனுலாவு கூனிகூன்
உண்டை கொண்டரங்க வோட்டியுண்மகிழ்ந்த நாதனூர்
நண்டையுண்டு நாரைபேர வாளைபாய நீலமே
அண்டை கொண்டுகெண்டை மேயுமந்த ணீரரங்கமே.

இலைத்தலைச் சரந்துரந்திலங்கை கட்டழித்தவன்
மலைத்தலைப் பிறந்திழிந்து வந்துநுந்து சந்தனம்
குலைத்தலைத் திறுத்தெறிந்த குங்குமக் குழம்பினோடு
அலைத்தொழுகு காவிரி அரங்கமேய வண்ணலே.

நின்றவண் கீர்த்தியும் நீள்புனலும் நிறைவேங்கடப்பொற்
குன்றமும் வைகுந்தநாடும் குலவிய பாற்கடலும்*
உன்றனக் கெத்தனையின்பந்தரும் உன்னிணை மலர்த்தாள்
என்றனக்குமது * இராமானுசா இவையீந்தருளே.

தீர்த்தத்தில் ப்ரணவத்தை யெழுதி அதில் ஆசார்யனுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தையும் கங்காதி நதிகளையும் ஆவாஹநம் செய்து "இமம் மே கங்கே யமுநே ஸரஸ்வதி" என்றும் "கங்கை கங்கை யென்ற வாசகத்தாலே கடுவினை களைந்திட கிற்கும் கங்கை" என்றும் "கங்கையிற் புனிதமாய காவிரி" என்றும் சொல்லிக்கொண்டு காதையும் மூக்கையும் விரல்களால் அமுக்கிக்கொண்டு ஹரிர்ஹரி: ஹரிர்ஹரி: என்று ஏழு முறை அவகாஹன ஸ்நானம் செய்வது,

தீர்த்தமாடியான பிறகு தலையையும் உடலையும் துணியால் துடைத்துக் கொள்ளும்போது அநுஸந்திக்க வேண்டியவை :—

काषायशोभि कमनीयशिखानिवेशं दण्डत्रयोज्ज्वलकरं विमलोपवीतम् ।
उद्यद्दिनेशनिभ मुल्लसदूर्ध्वपुण्ड्रं रूपं तवास्तु यतिराज ! दृशोर्ममाग्रे ॥

காஷாயசோபி கமநீயசிகாநிவேசம்
தண்டத்ரயோஜ்வலகரம் விமலோபவீதம் ।
உத்யத்திநேசநிப முல்லஸதூர்த்வபுண்ட்ரம்
ரூபம் தவாஸ்து யதிராஜ ! த்ருசோர் மமாக்ரே ॥

एतानि तानि भुवनत्रयपावनानि संसाररोगशकलीकरणौषधानि ।
जिह्वातले मम लिखानि यथा शिलायां रामानुजेति चतुराण्यमृताक्षराणि ॥

ஏதாநி தாநி புவநத்ரயபாவநாநி ஸம்ஸாரரோகசகலீகரணௌஷதாநி ।
ஜிஹ்வாதலே மம லிகாநி யதா சிலாயாம் ராமாநுஜேதி சதுராண்யம்ருதாக்ஷராணி ॥

कमलनयन वासुदेव विष्णो धरणिधराच्युत शङ्खचक्रपाणे ।
भव शरणमितीरयन्ति ये वै त्यज भट दूरतरेण तान् अपापान् ॥

கமலநயந வாஸுதேவ விஷ்ணோ தரணிதராச்யுத சங்கசக்ரபாணே ! ।
பவ சரணமிதீரயந்தி யே வை த்யஜ பட தூரதரேண தாந் அபாபாந் ॥

रमादयित रङ्गभूरमण कृष्ण विष्णो हरे ! त्रिविक्रम जनार्दन त्रियुग नाथ नारायण ।
इतीव शुभदानि यः पठति नामधेयानि ते न तस्य यमवश्यता नरकपातभीतिः कुतः ? ॥

ரமாதயித ரங்கபூரமண க்ருஷ்ண விஷ்ணோ ஹரே !
த்ரிவிக்ரம ஜநார்தந த்ரியுக நாத நாராயண ।
இதீவ சுபதாநி ய: படதி நாமதேயாநி தே
ந தஸ்ய யமவச்யதா நரகபாதபீதி: குத: ? ॥

स्वपुरुषमभिवीक्ष्य पाशहस्तं वदति यमःकिल तस्य कर्णमूले ।
परिहर मधुसूदनप्रपन्नान् प्रभुरहमन्यनृणां न वैष्णवानाम् ॥

ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே ।
பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் ॥

ये कण्ठलग्नतुलसीनलिनाक्षमालाः ये बाहुमूलपरिचिह्नितशङ्खचक्राः ।
ये वा ललाटफलके लसदूर्ध्वपुण्ड्राः ते वैष्णवा भुवनमाशु पवित्रयन्ति ॥

யே கண்டலக்நதுலஸீநலிநாக்ஷமாலா: யே பாஹுமூலபரிசிஹ்நிதசங்கசக்ரா: ।
யே வா லலாடபலகே லஸதூர்த்வபுண்ட்ராஸ் தே வைஷ்ணவா புவநமாசு பவித்ரயந்தி ॥

ஸ்நாநத்தின் பிறகு தேவர்ஷி பித்ரு தர்ப்பணம் செய்ய வேணும்.
ஆசமனமும் ப்ராணாயாமமும் செய்து

श्री भगवदाज्ञया भगवत्कैङ्कर्यरूपं देवर्षिपितृतर्पणं करिष्ये ।

"ஸ்ரீபகவதாஜ்ஞயா பகவத்கைங்கர்யரூபம் தேவர்ஷிபித்ருதர்ப்பணம் கரிஷ்யே"

ब्रह्मादयो ये देवाः तान् देवान् तर्पयामि। सर्वान् देवान् तर्पयामि। सर्वदेवगणान् तर्पयामि। सर्वदेव पत्नीस्तर्पयामि। सर्वदेवगणपत्नीस्तर्पयामि।

"ப்ரஹ்மாதயோ யே தேவா:. தாந் தேவாந் தர்ப்பயாமி. ஸர்வாந் தேவாந் தர்ப்பயாமி. ஸர்வதேவகணாந் தர்ப்பயாமி. ஸர்வதேவபத்நீஸ் தர்ப்பயாமி. ஸர்வதேவகணபத்நீஸ் தர்ப்பயாமி."

என்று தேவதீர்த்தத்தாலே விடுவது. (பிறகு வடதிசை முகமாக)

कृष्णद्वैपायनादयः ये ऋषयः तान् ऋषीन् तर्पयामि। सर्वान् ऋषीन् तर्पयामि। सर्वर्षिगणान् तर्पयामि। सर्वर्षिपत्नीस्तर्पयामि। सर्वर्षिगणपत्नीस्तर्पयामि।

"க்ருஷ்ணத்வைபாயநாதய: யே ருஷய: தாந் ருஷீந் தர்ப்பயாமி. ஸர்வாந் ருஷீந் தர்ப்பயாமி. ஸர்வருஷிகணாந் தர்ப்பயாமி. ஸர்வருஷிபத்நீஸ் தர்ப்பயாமி. ஸர்வருஷிகணபத்நீஸ் தர்ப்பயாமி.

என்று ருஷிதீர்த்தத்தாலே விடுவது. (பிறகு ப்ராசீநாவீதியாகித் தெற்கு நோக்கி)

सोमः पितृमान् यमोङ्गिरस्वान् अग्निः कव्यवाहन इत्यादयो ये पितरः तान् पितॄन् तर्पयामि। सर्वान् पितॄन् तर्पयामि। सर्वपितृगणान् तर्पयामि। सर्वपितृपत्नीस्तर्पयामि॥ सर्वपितृगणपत्नीस्तर्पयामि।

"ஸோம: பித்ருமாந் யமோங்கிரஸ்வாந் அக்நி: கவ்யவாஹந இத்யாதயோ யேபிதர:; தாந் பித்ரூந் தர்ப்பயாமி. ஸர்வாந் பித்ரூந் தர்ப்பயாமி. ஸர்வபித்ருகணாந் தர்ப்பயாமி. ஸர்வ பித்ருபத்நீஸ் தர்ப்பயாமி. ஸர்வபித்ருகணபத்நீஸ் தர்ப்பயாமி."

என்று பித்ருதீர்த்தத்தாலே.

ऊर्जं वहन्तीरमृतं घृतं पयः कीलालं परिस्रुतं स्वधास्थ तर्पयत मे पितॄन्। तृप्यत तृप्यत तृप्यत।

"ஊர்ஜம் வஹந்தீரம்ருதம் க்ருதம் பய: கீலாலம் பரிஸ்ருதம் ஸ்வதாஸ்த தர்ப்பயத மே பித்ரூந். த்ருப்யத த்ருப்யத த்ருப்யத."

என்று சொல்லி தீர்த்தத்தில் அஞ்ஜலிமுத்ரையினால் மூன்றுமுறை பிரதக்ஷிணம் செய்து மூன்று ஜலாஞ்ஜலி விடுவது: பிறகு உபவீதியாய் ஆசமனம் செய்வது. யதாஸௌகர்யம் பன்னிரண்டு திருமண்காப்பு; அல்லது இரண்டு திருமண்காப்பு,

ओं केशवाय नमः नारायणाय नमः माधवाय नमः गोविन्दाय नमः विष्णवे नमः मधुसूदनाय नमः त्रिविक्रमाय नमः वामनाय नमः श्रीधराय नमः हृषीकेशाय नमः पद्मनाभाय नमः दामोदराय नमः।

ஓம் கேசவாய நம: நாராயணாய நம: மாதவாய நம: கோவிந்தாய நம: விஷ்ணவே நம: மதுஸூதநாய நம: த்ரிவிக்ரமாய நம: வாமநாய நம: ஸ்ரீதராய நம: ஹ்ருஷீகேசாய நம: பத்மநாபாய நம: தாமோதராய நம:.

இந்த பன்னிரண்டு மந்த்ரங்களினால் நெற்றி முதலான பன்னிரண்டு இடங்களில் ஆவாஹனம் செய்வது. இப்படியே ஸ்ரீசூர்ணத்திற்கு மாவாஹனம் செய்க.

श्रियै नमः अमृतोद्भवायै नमः कमलायै नमः चन्द्रशोभिन्यै नमः विष्णुपत्न्यै नमः वैष्णव्यै नमः वरारोहायै नमः हरिवल्लभायै नमः शार्ङ्गिण्यै नमः देवदेविकायै नमः महालक्ष्म्यै नमः लोकसुन्दर्यै नमः सर्वाभीष्टफलप्रदायै नमः॥

ச்ரியை நம: அம்ருதோத்பவாயை நம: கமலாயை நம: சந்த்ரசோபிந்யை நம: விஷ்ணு பத்ந்யை நம: வைஷ்ணவ்யை நம: வராரோஹாயை நம: ஹரிவல்லபாயை நம: சார்ங்

கிண்யை நம: தேவதேவிகாயை நம: மஹாலக்ஷ்ம்யை நம: லோகஸுந்தர்யை நம: ஸர்வாபீஷ்டபலப்ரதாயை நம:.

(பிறகு குருபரம்பராதியநுஸந்தானம் செய்வது)
(வாக்ய குருபரம்பரை)

अस्मद्गुरुभ्यो नमः अस्मत्परमगुरुभ्यो नमः अस्मत्सर्वगुरुभ्यो नमः श्रीमते रामानुजाय नमः श्रीपराङ्कुशदासाय नमः श्रीमद्यामुनमुनये नमः श्रीराममिश्राय नमः श्री पुण्डरीकाक्षाय नमः श्रीमन्नाथमुनये नमः श्रीमते शठकोपाय नमः श्रीमते विष्वक्सेनाय नमः श्रियै नमः श्रीधराय नमः ॥

அஸ்மத்குருப்யோ நம: அஸ்மத்பரமகுருப்யோ நம: அஸ்மத்ஸர்வகுருப்யோ நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீபராங்குசதாஸாய நம: ஸ்ரீமத்யாமுநமுநயே நம:
ஸ்ரீராமமிச்ராய நம: ஸ்ரீபுண்டரீகாக்ஷாய நம: ஸ்ரீமந்நாதமுநயே நம:
ஸ்ரீமதே சடகோபாய நம: ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாய நம: ச்ரியை நம: ஸ்ரீதராய நம:.

(ச்லோக குருபரம்பரை)

अस्मद्देशिकमस्मदीयपरमाचार्यानशेषान् गुरून् श्रीमल्लक्ष्मणयोगिपुङ्गवमहापूर्णौ मुनिं यामुनम् ।
रामं पद्मविलोचनं मुनिवरं नाथं शठद्वेषिणं सेनेशं श्रियमिन्दिरासहचरं नारायणं संश्रये ॥

அஸ்மத்தேசிகம் அஸ்மதீயபரமாசார்யாந் அசேஷாந் குரூந்
ஸ்ரீமல்லக்ஷ்மணயோகிபுங்கவமஹாபூர்ணௌ முநிம் யாமுநம் |
ராமம் பத்மவிலோசநம் முநிவரம் நாதம் சடத்வேஷிணம்
ஸேநேசம் ச்ரியமிந்திராஸஹசரம் நாராயணம் ஸம்ச்ரயே ||

(திருமந்திரம்) ओं नमो नारायणाय ஓம் *நமோ நாராயணாய*

(த்வயம்) श्रीमन्नारायणचरणौ शरणं प्रपद्ये श्रीमते नारायणाय नमः ।

ஸ்ரீமந்நாராயணசரணௌ சரணம் ப்ரபத்யே, ஸ்ரீமதே நாராயணாய நம:

(ஸ்ரீக்ருஷ்ண சரமச்லோகம்)

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज । अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि माशुचः ॥

ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ |
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச: ||

(வராஹ சரமச்லோகம்)

